**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 185/2019**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 சைமன் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 15.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் டிப்ளமோ மெக்கானிக்கல் இஞ்ஜீனியரிங் படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். தாவா சொத்து ஆரம்பத்தில் எனது தகப்பனார் ஆரோக்கியத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் என்ன தொழில் செய்தார் என்றால் சொந்தமாக St.Antony தொடக்கப்பள்ளி என்ற பள்ளியை நிர்வாகம் செய்து அதன் தலைமையாசிரியாக பணியாற்றினார். அதே பள்ளியில் எனது தாயார் ஆசிரியராக பணி செய்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் தாயார் பெயரில் 1972 ல் தானசெட்டில்மென்ட் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அது இந்த தாவா சொத்து என்றால் சரிதான். எனது பெற்றோருக்கு 5 ஆண்கள், 4 பெண்கள் வாரிசுகள் ஆவோம்.

2) மேற்படி நபர்களில் என்னைத் தவிர மற்றவர்கள் திருமணம் ஆகி மற்றும் தொழில் சம்பந்தமாக வேறு ஊர்களுக்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறக்கும்வரை மேற்படி பள்ளியை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல, அவர் உயிருடன் இருக்கும்போதே தனது பள்ளியை அரசாங்கத்திற்கு ஒப்படைத்துவிட்டார். எந்த வருடம் அவ்வாறு ஒப்படைத்தார் என்றால் சரியாக தெரியவில்லை. எனது பெற்றோர்கள் இறக்கும் வரை ஒன்றாகத்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். நானும் அவர்களுடன்தான் இருந்தேன். நானும் எனது பெற்றோரும் வேறு வேறு வீடுகளில் வசித்தோமா என்றால் இல்லை, ஒரே வீட்டில் ஒன்றாகத்தான் இருந்தோம். என் பெற்றோருக்கிடையே கருத்து வேறுபாடு ஏதுவும் இருந்ததா என்றால் இல்லை.

3) எனது பெற்றோர்கள் இருவரும் ஒருவருக்கு எதிராக மற்றொருவர் செயல்படமாட்டார்கள் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் இருவரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். யார் முதலில் இறந்தது என்றால் என் தாயார்தான் முதலில் இறந்தார். எனது தாயார் எந்த இடத்தில் இறந்தார் என்றால் ஆலம்பட்டிபுதுாரில் உள்ள எனது சகோதரி லீமா என்பவர் வீட்டில் இருந்த போது இறந்துவிட்டார். எனது தகப்பனாரும் ஆலம்பட்டிபுதுாரில்தான் இறந்தார் என்றால் சரிதான். எனது பெற்றோர் இறப்பு காரியத்திற்கு நான் போகவில்லை என்றால் சரியல்ல, நான் போனேன். எனது பெற்றோர் இருவரையும் எனது சகோதரி லீமாதான் அவரது வீட்டில் வைத்து மருத்துவ உதவிகள் செய்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது பெற்றோர் இருவரும் எத்தனை வருடமாக லீமா வீட்டில் இருந்தனர் என்றால் அதுபற்றி தெரியாது. 2003 ம் வருடம் நான் எனது தகப்பனாரை அடித்து வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டேனா என்றால் இல்லை.

4) எனது தகப்பனார் நடத்திய பள்ளியில் கல்வி முகமை என்ற அமைப்பு இருந்ததா என்றால் இருந்தது. அதில் நானும் ஒரு உறுப்பினர் என்றால் நான்தான் அதன் தலைவர். மேற்படி அமைப்பில் நான் பல்வேறு மோசடி செய்ததாக எனது தகப்பனார் என்னை மேற்படி பதவியில் இருந்து நீக்கி விட்டார் என்றால், பதவியில் இருந்து நீக்கிவிட்டார், அதை எதிர்த்து நான் வழக்கு தாக்கல் செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ளது. பள்ளி நிர்வாகம் சம்பந்தமாக எனக்கும், எனது தகப்பனாருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதா என்றால் இல்லை. 09.03.2001 அன்று தினசரி நாளிதழில் எனது தகப்பனார் எனக்கு எதிராக ஒரு அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கரூர் மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் எனது தகப்பனாருக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அ.வ.எண் 168/2001 என்ற வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் முழு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான்.

5) அதற்கு எதிராக மேல்முறையீடு எண் 43/2010 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதன் எண் தெரியுமா என்றால் நகல் தாக்கல் செய்துள்ளேன், எண் தெரியவில்லை. நான் சொல்வது போல இரண்டாவது மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் சாட்சியத்தில் சொல்லியபடி எனது தகப்பனார், எனது சகோதரர் கஸ்பார், ஜெயராஜ், ஜோசப் கென்னடி ஆகியோருக்கு எதிராக அ.வ.எண்.68/1995 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சம்பந்தமான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) தாவா சொத்து 4 ஏக்கர் 99 செண்ட் என்றால் சரியல்ல, அதற்கு அதிகமாக இருக்கும். எனது தாயார் எனக்கு எந்த தேதியில் செட்டில்மெண்ட ஆவணம் செய்து கொடுத்தார் என்றால் 08.09.2005 ல் எழுதிக் கொடுத்தார். மேற்படி ஆவணம் எழுதிக் கொடுத்த தேதியில் எனது தாயார் எங்கே இருந்தார் என்றால், எனது பெற்றோர் இருவரும் என்னுடன்தான் இருந்தனர். எனது பெற்றோர்கள் இருவரும் சுமூக உறவில்தான் இருந்தார்களா என்றால் ஆமாம். எனது தாயாரை ஆவணம் எழுத யார் அழைத்து சென்றது என்றால் நான்தான் அழைத்து சென்றேன். மேற்படி ஆவணம் எழுதுவதற்கான சங்கதிகளை ஆவண எழுத்தருக்கு யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். மேற்படி ஆவணத்தை துரைராஜ் என்ற வழக்கறிஞர் எழுதியுள்ளார் என்றால் சரிதான்.

7) மேற்படி வழக்கறிஞரிடம், மேற்படி ஆவணம் எழுத வேண்டும் என்ற சங்கதியை எப்போது சொன்னேன் என்றால், சுமார் 1 மாதத்திற்கு முன்பு சொன்னேன். ஆவண எழுத்தர் ஆவணத்தை தயார் செய்த பின்னிட்டு எங்களுக்கு தகவல் சொன்னதன் பேரில் எனது தாயார் அவராக சென்றாரா

என்றால், நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் போனோம். பத்திர அலுவலகத்திற்கு யார் யார் சென்றோம் என்றால், நான், எனது தாயார், பத்திர எழுத்தர் ஆகியோர் பத்திர எழுத்தரின் காரில் சென்றோம். எத்தனை மணிக்கு பத்திர அலுவலகம் சென்றோம் என்றால், மதியம் 02.00 மணிக்கு பத்திரம் பதிவு செய்துவிட்டோம். எனது வீட்டில் இருந்து பத்திர அலுவலகம் 8 கிமீ தூரம் இருக்குமா என்றால், 10 கிமீ இருக்கும். எனது வீட்டில் இருந்து எப்போது கிளம்பினோம் என்றால் மதியம் சுமார் 01.30 மணி இருக்கும். பத்திர அலுவலகத்திற்கு சென்றவுடன் யார் கையெழுத்து போட்டது என்றால் எனது தாயார் போட்டார்கள், நானும் கையெழுத்து போட்டேன்.

8) அப்போது என் தாயார் தனது மருந்து மாத்திரைகளை உடன் எடுத்து சென்றாரா என்றாரா என்றால், அவர் மதியம் மாத்திரை சாப்பிட்டு விட்டுதான் பத்திர அலுவலகத்திற்கு வந்தார். பத்திர பதிவின் போது எனது தோட்டத்தில் வேலை செய்யும் கருப்பன் என்பவர் உடன் இருந்தார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தாயாரின் கையெழுத்து ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு விதமாக உள்ளது என்றால் சரியல்ல, ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. பி.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து எனது தாயாருடையது அல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து யார் போட்டது என்றால் வழக்கறிஞர் துரைராஜ் ஏற்பாடு செய்திருந்தார். பி.சா.ஆ.1 ஆவணத்தில் என் தாயார் கையெழுத்து போடும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை.

9) என் தாயாரிடம் வழக்கறிஞர் துரைராஜ் கையெழுத்து வாங்கினாரா என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள நபர்கள் கையெழுத்து வாங்கினார்கள். பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சியை விசாரித்தால் மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்ற உண்மை தெரியும் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளை விசாரிக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சியாக உள்ள நபர்கள்

தான் மேற்படி ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் ஆமாம்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**